TNVL110036662023

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடியாத்தம், வேலூர் மாவட்டம்**

முன்னிலை:– **R.சரண்யா, B.A.,LLB.,(Hons).,LLM.,**

நீதித்துறை நடுவர், குடியாத்தம்.

2026வது வருடம் ஆகஸ்ட் திங்கள் 04 ஆம் நாள் செவ்வாய் கிழமை

**DVC.No.8/2023**

**CNR No.TNVL11-003666-2023**

கல்பனா, வயது 25,
க/பெ. கோவிந்தன்,
எண்.328, ஏரியான்பட்டி கிராமம்,
எர்த்தாங்கல் அஞ்சல்,
குடியாத்தம் தாலுக்கா,
வேலூர் மாவட்டம்.

......... மனுதாரர்

**//எதிர்//**

கோவிந்தன், வயது 30,

த/பெ. விநாயகம்,

கீழ்தோப்பு கிராமம்,

அக்ராவரம் அஞ்சல்,

குடியாத்தம் தாலுக்கா,

வேலூர் மாவட்டம்.

....... எதிர்மனுதாரர்

TNVL110036662023

இம்மனு 06.06.2023ம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு 04.08.2026ம் தேதி வந்த போது மனுதாரர்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V.ரஞ்சித்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது குடும்ப வன்முறையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 12 of DV Act-ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## (I). மனுவின் சாராம்சம்:

1. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 23–08–2013 அன்று பெரியோர்கள் முன்னிலையில் திருப்பதி திருமலை கோவிலில் இந்து முறைப் படி திருமணம் நடைப்பெற்றது என்றும் திருமணத்தின் போது மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாருக்கு சுமார் 15 சவரன் நகைகள் மற்றும் மனுதாரரின் கணவருக்கு 2 1/2 சவரன் மோதிரம் மற்றும் கழுத்து செயின் ஆக மொத்தம் 17 ½ சவரன் தங்க நகைகள் மற்றும் எதிர்மனுதாரருக்கு ரூ 70,000/–மதிப்புள்ள ஹிரோ ஹோண்டா இரண்டு சக்கர வாகனம் மற்றும் வீட்டிற்கு தேவையான கட்டில், பீரோ இதர

சாமான்கள் மதிப்பு ரூ75,000/- க்கு சீதனமாக கொடுத்தனர் என்றும் திருமணத்தின் பயனாக மனுதாரருக்கு விஷ்வா, 12 வயது மற்றும் தர்ஷித், 10 வயது என்ற இரண்டு ஆண்குழந்தை உள்ளனர் என்றும் எதிர்மனுதாரர் திருமணதிற்கு முன்னர் தங்க நகை செய்யும் ஆச்சாரி வேலை செய்து வந்தார் என்றும் திருமணதிற்கு பின்னர் எதிர்மனுதாரர் சரிவர வேலைக்கு செல்லவில்லை என்றும் மேலும் எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்து தொடர்ந்து மனுதாரின் பெற்றோரிடமிருந்து நகை பணம் வாங்கி வரும்படியும் ஆட்டோ சொந்தமாக வாங்கி ஓட்ட உள்ளதாகவும் கூறி எதிர்மனுதாரர் கேட்பார் என்றும் அதற்கு மனுதாரர் மறுத்துவிட்டார் என்றும், அதற்கு எதிர்மனுதாரரின் தந்தை வினாயகம் மற்றும் தாய் பவுன் மற்றும் எதிர்மனுதாரரின் சகோதரர் கணபதி ஆகியோர் மனுதாரரை அசிங்கமாக பேசி திட்டி மற்றும் கொடுமை படுத்த ஆரம்பித்தனர் என்றும், அதனால் மனுதாரின் பெற்றோர்கள் மனுதாரரின் எதிர்கால வாழ்கையை கருதி எதிர்மனுதாரருக்கு, கடந்த 05-02-2015 அன்று TN-23-AJ-8581 வாகனத்தை ரூ.2,10,000/- வாணியம்பாடி அடுத்த அம்பலூர் கிராமத்தில் வசிக்கும் லெனின் என்பவரிடம் விலைக்கு வாங்கி கொடுத்தனர் என்றும், மேற்படி விற்பனைக்கு பெற்றத்தொகையை மனுதாரின் தந்தை சக்திவேல் ஆட்டோ பைனான்ஸில் கடன் பெற்று கொடுத்தார் என்றும் மேற்படி ஆட்டோவை எதிர்மனுதாரர் யாருக்கும் தெரியாமல் கடந்த 2016

TNVL110036662023

ஆண்டே விற்பனை செய்துவிட்டார் என்றும் இது குறித்து மனுதாரின் பெற்றோர் மற்றும் மனுதாரர் கேட்டதற்க்கு எதிர்மனுதாரர் குடும்பதினர் தூண்டுதலின் பேரில் மனுதாரையும் மனுதாரின் பெற்றோரையும் அசிங்கமாக பேசி அடித்து கொடுமை படுத்தினார்கள் என்றும், மனுதாரர் மேலும் சமர்பிப்பது யாதெனில் பலமுறை மனுதாரின் பெற்றோர்கள் வீட்டு பெரியோர்கள் முன்னிலையில் சமாதானம் செய்து அனுப்பியும் எதிர்மனுதாரர் மற்றும் அவரின் உடன் பிறந்தவர்கள் மற்றும் அவரின் பெற்றோர்கள் மனுதாரிடம் நீ உங்கள் வீட்டிற்கு ஒரே மகள் தானே உங்கள் வீட்டிலிருந்து பணம் வாங்கி வா மற்றும் சொத்தை எழுதிக்கொண்டு வா என்று தொடர்ந்து குடும்பத்துடன் கொடுமைப் படுத்தி வந்தனர் என்றும், மனுதாரர் மேலும் சமர்பிப்பது யாதெனில் மனுதாரர், எதிர்மனுதாரர் குடும்பத்தில் உள்ள அனைவரும் மனுதாரரை வேலைக்காரி போல் நடத்தி மனுதாரருக்கும் மனுதாரின் குழந்தைகளுக்கும் தேவையான அடிப்படை வசதிகளான உணவு, உடை ஆகியவற்றை கொடுக்காமல் கொடுமைப் படுத்தி வந்தனர் என்றும், எதிர்மனுதாரர் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி மனுதாரரை தினமும் இரவு நேரங்களில் அடித்து வீட்டிலிருந்து வெளியே தள்ளி கதவை பூட்டி விடுவார்கள் என்றும், மேலும் எதிர்மனுதாரரின் குடும்பத்தில் உள்ளவர்கள் மனுதாரிடம் உன் பெற்றோர் வீட்டிற்கு சென்று பணம் வாங்கி வரும்படி கூறியதில் இதுவரை மனுதாரின் பெற்றோர்கள் பணமாக

ரூபாய் 2,50,000 கொடுத்துள்ளார்கள் என்றும், திருமணத்தின் போது மனுதாரருக்கு அளித்த 15 சவரன் நகைகளை எதிர் மனுதாரர் அடகு வைத்து குடித்துவிட்டார் என்றும், கடந்த 2019 ஆம் ஆண்டு மனுதாரரை அடித்து கையை உடைத்துவிட்டனர் என்றும், அதன்பின்னர் மனுதாரர் அவரது குழந்தைகளுடன் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார் என்றும், தற்போது அவரது பெற்றோருடன் வாழ்ந்து வருகிறார் என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர் மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்த பின்னர் எதிர்மனுதாரர் குடியாத்தம் சார்பு நீதிமன்றத்தில், சேர்ந்து வாழ வேண்டும் என்று H.M.O.P No. 97/2019 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றும், அதன்பின்னர் மனுதாரர் மற்றும் அவரது குழந்தைகளுக்கும் ஜீவனாம்சம் கேட்டு M.C.No:–3/2020 என்ற வழக்கை மனுதாரர் கணவர் மீது குடியாத்தம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், இன்றுவரை எதிர்மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் பெற்றோர் விநாயகம், பவுன் மற்றும் எதிர்மனுதாரரின் சகோதரிகள் கௌசல்யா கவிதா மற்றும் சகோதரர் கணபதி ஆகியோர் வீட்டில் சேர்க்காமல் பணம் நகை கேட்டும் உணவு, உடை அளிக்காமல் வாழவும் வீட்டில் அனுமதிக்காமல் அடித்து உதைத்து தினமும் வன்கொடுமை செய்தனர் என்றும் கொடுமைகளை செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்திடவும் மனுதாரின் சீதனப்பொருட்கள் மற்றும் மனுதாரின் பெற்றோர்கள் திருமணத்தின்

போது கொடுத்த 17½ சவரன் நகைளை திரும்பி பெற்றுத் தரவும் மனுதாரின் பெற்றோர்களிடமிருந்து, மனுதாரர் வாங்கி வந்த பணம் ரூ–2,50,000 மற்றும் ஆட்டோ வாங்கிய பணம் ரூபாய் 2,10,000/– த்தை திருப்பிபெற்று தரவும் மனுதாரர் மற்றும் அவரது குழந்தைகளுகளின் நலனுக்காக ரூ,10,00,000 இழப்பிடு வழங்கிடவும் கேட்டுள்ளார்.

2. எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் அஜராகி நகல் பெற்றுகொண்டு போதுமான காலஅவகாசத்திற்கு பின்னரும் எதிருரை தாக்கல் செய்யாமல் இருந்ததால் 24.07.2025 அன்று ஒருதலைபட்சமாகப்பட்டுள்ளார்

3. மனுவில் கண்ட சங்கதிகளை வலியுறுத்தி மனுதாரர் ம.சா.1 ஆக சாட்சியம் அளித்து ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களை தனது தரப்பில் குறியீடு செய்துள்ளார் .

4. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

5. மனுவில் தீர்வு செய்யப்பட வேண்டிய சங்கதிகள் என்னவெனில்

**i)** மனுதாரருக்கு குடும்ப வன்முறையில் இருந்து பெண்கள் பாதுகாப்பு சட்டம் 18–ன் கீழ் பாதுகாப்பு உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டுமா என்பதேயாகும்.

ii) எதிர்மனுதாரரின் பாதுகாப்பில் உள்ள மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாரருக்கு போட்ட 17 ½ சவரன் தங்க நகையும், ஆட்டோ வாங்குவதற்காக ரூபாய் 2,10,000/- மற்றும் அவ்வபோது எதிர்மனுதாரருக்கு மனுதாரின் பெற்றோர்கள் கொடுத்த ரூபாய் 2,50,000 ஆகியவற்றை திரும்ப கொடுக்க பிரிவு 19-ன் கீழ் உத்த உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டுமா என்பதேயாகும்.

(ii) மனுதாரருக்கு பிரிவு-22ன் கீழ் ரூ.10 இலட்சம் இழப்பீடாக செலுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டுமா என்பதேயாகும்.

## (II). தீர்வு

**6. (I) மனுதாரருக்கு குடும்ப வன்முறையில் இருந்து பெண்கள் பாதுகாப்பு சட்டம் 18-ன் கீழ் பாதுகாப்பு உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டுமா என்பதேயாகும்.**

மனுதாரர் தரப்பில் மனுதாரர் கல்பனா ம.சா.1 ஆக சாட்சி அளித்துள்ளார். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ-5 வரையான ஆவணங்கள் குறயீடு செய்துள்ளார். ம.சா.1 கல்பனா அவரது முதல் விசாரணையில் எதிர்மனுதாரருடன் திருமணம் நடைபெற்றது குறித்தும், திருமணத்தின்போது அளித்த நகைகள், பணம் மற்றும் சீர்வரிசை ஆகியவற்றை திருப்பி அளிக்க கோருவது குறித்தும் எதிர்மனுதாரர் செய்த குடும்ப வன்முறைகள் குறித்தும் சாட்சி அளித்துள்ளார். மேலும் திருமணத்தின் பயனாக மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் தர்ஷித் விஷ்வா என்ற இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர் என்பதும்

தெரியவருகிறது. மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதார் குடும்ப வன்முறை செயல்களில் ஈடுபட்டுள்ளாரா என்பதை குறித்து பரிசீலனை செய்கையில் மனுதாரர் அவர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் திருமணத்திற்கு பின் எதிர்மனுதாரர் சரிவர வேலைக்கு செல்லாமல் குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்தும் வரதட்சனை கேட்டும் ஆட்டோ கேட்டும் கொடுமை செய்துள்ளார் என்றும் இரவுநேரங்களில் வெளியே தள்ளி கதவை மூடிவிடுவார் என்றும், 2019ம் வருடம் என்றும் மனுதாரரை அடித்து கையை உடைத்துவிட்டார் என்றும் சாட்சி அளித்துள்ளார். எதிர்மனுதாரர் மனுதாரருடன் வாழ்ந்து வந்த காலத்தில் மனுதாரரை அடிப்பதும், கொடுமை செய்வதும் வீட்டில் இருந்து வெளியே தள்ளிவிடுவதும் போன்ற செயல்களை செய்துவந்ததாக மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் தெரியவருகிறது. எனவே, எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக எவ்விதமான குடும்ப வன்முறை செயல்களிலும் ஈடுபடக்கூடாது என பாதுகாப்பு மற்றும் தடை உத்தரவு பிறப்பித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

ii) **எதிர்மனுதாரரின் பாதுகாப்பில் உள்ள மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாரருக்கு போட்ட 17 ½ சவரன் தங்க நகையும், ஆட்டோ வாங்குவதற்காக ரூபாய் 2,10,000/- மற்றும் அவ்வபோது எதிர்மனுதாரருக்கு மனுதாரின் பெற்றோர்கள் கொடுத்த ரூபாய் 2,50,000**

TNVL110036662023

**ஆகியவற்றை திரும்ப கொடுக்க பிரிவு 19–ன் கீழ் உத்த உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டுமா என்பதேயாகும்.**

மனுதாரரின் நகைகள், திருமணத்தின்போது அளித்த சீர்வரிசை பொருட்கள் மனுதாரின் பெற்றோர்களிடம் இருந்தும் மனுதாரர் வாங்கி வந்ததாக சொல்லப்படும் பணம் ரூபாய்2,50,000 மற்றும் ஆட்டோ வாங்க கொடுத்த பணம் ரூபாய் 2,10,000 ஆகியவற்றை திரும்ப அளிப்பது தொடர்பாக கவனமாக பரிசீலனை செய்ததில் மேற்படி நகைகள் பணம், திருமணத்தின்போது எதிர்மனுதாரருக்கு அளித்ததற்கான எந்த வித ஆதாரம் அல்லது ரசீது ஆகியவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி நகைகள் மற்றும் பணம் எதிர்மனுதாரரிடம் திருமணத்தின்போது அளித்ததற்கான திருமண புகைப்படம் ஆதாரம் எதுவும் மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனவே, மனுதாரரின் சாட்சியத்தை மற்றும் வைத்து மேற்படி சீதனபொருட்கள், தங்கநகைகள் ஆகியவை எதிர்மனுதாரரிடம்தான் உள்ளது என தீர்வு செய்ய இயலாது. மேலும் எதிர்மனுதாரருக்கு ஆட்டோ வாங்க கொடுத்ததாக சொல்லப்படும் ரூபாய் 2,10,000 ஆதாரமாக எந்த ஆவணமும் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை. மேற்படி வரதட்சனையாக அவ்வபோது எதிர்மனுதாரர் கேட்கும் போது மனுதாரரின் பெற்றோர் கொடுத்தாக சொல்லப்படும் ரூபாய் 2,50,000 அளித்தற்கு எந்த வங்கி பரிவர்தனை ஆதாரமும் மனுதாரர் தரப்பில்

TNVL110036662023

தாக்கல் செய்ய வில்லை. எனவே, மேற்படி பரிகாரம் போதிய சாட்சிய சான்றாவணங்கள் இல்லாத காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

**iii) மனுதாரருக்கு பிரிவு–22ன் கீழ் ரூ.10 இலட்சம் இழப்பீடாக செலுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டுமா என்பதேயாகும்.**

மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதாரர் செய்த குடும்ப வன்முறை செயல்களால் மனுதாரர், மனதளவிலும், உடலளவிலும் பாதிக்கப்பட்டு மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளார். எனவே, மனுதாரருக்கு உரிய இழப்பீடு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையும் என்று இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது. ம.சா.1 கல்பனா தாக்கல் செய்துள்ள Assets and liability statementல் எதிர்மனுதாரர் சொந்தமாக ஆட்டோ வைத்து ஓட்டி மாதம் ரூபாய் 50,000 சம்பதித்து வருவதாக தெரிவத்துள்ளார். ஆனால் ம.சா.1 கல்பனா தாக்கல் செய்துள்ள முதன்மை பிரமாண வாக்கு மூலத்தில் எதிர்மனுதாரர் ஆட்டோ வை 2016 ம் ஆண்டே விற்பணை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். இருப்பினும் எதிர்மனுதாரருக்கு மனுதாரரையும் அவரது இரண்டு மகன்களையும் கணவர் என்ற முறையில் பராமரிக்க வேண்டிய கடமை உள்ளதாலும் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக குடும்ப வன்முறை செயல்களில் ஈடுபட்டதாக தெரியவந்துள்ளதாலும் மனுதாரருக்கு ஏற்ப்பட்ட மன உளைச்சல், வாழ்க்கை இழப்பு ஆகியவற்றிற்கு எதிர்மனுதாரர் ரூ.10

TNVL110036662023

லட்சம் இழப்பீடாக செலுத்த வேண்டும் என்று தீர்மானித்து இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

7. முடிவாக

8. மனுதாரருக்கு பாதுகாப்பு உத்தரவு அளித்து உத்தவிடப்படுகிறது. எதிர்மனுதாரர் எவ்வித இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என்று உத்தரவிடப்படுகிறது.

9. மனுதாரருக்கு போட்ட 17 ½ சவரன் தங்க நகையும், சீதன பொருட்களும் ஆட்டோ வங்குவதற்காக அளித்த ரூபாய் 2,10,000/- மற்றும் வரதட்சணையாக அவ்போது அளித்ததாக ரூபாய் 2,50,000 திரும்ப ஒப்படைக்க கோரிய பரிகாரம் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

மனுதாரருக்கு ஏற்ப்பட்ட மன உளைச்சல், வாழ்க்கை இழப்பு ஆகியவற்றிற்கு எதிர்மனுதாரர் ரூ.10 லட்சம் இழப்பீடாக செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் உடனுக்குடன் கணினியில் தனி தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரி பார்க்கப்பட்டு 04.08.2026 நாளாகிய இன்று என்னால் அவை அறிய பகிரப்பட்டது.

ஒம்/-இரா.சரண்யா.,

நீதித்துறை நடுவர்,
குடியாத்தம்.

TNVL110036662023

**<u>இணைப்புகள் :-</u>**

**<u>I. மனுதாரர் தரப்பு சாட்சிகள்:-</u>**

ம.சா.1 கல்பனா.

**<u>II. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

ம.சா.ஆ.1 புகார்தாரின் ஆதார் அட்டை நகல்

ம.சா.ஆ.2 தர்ஷித் குழந்தையின் ஆதார் நகல்

ம.சா.ஆ.3 விஷ்வா குழந்தையின் ஆதார் நகல்

ம.சா.ஆ.4 தர்ஷித் பிறப்பு சான்றிதல் நகல்

ம.சா.ஆ.5 விஷ்வா வின் பிறப்பு சான்றிதல் நகல்

**<u>III. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை.</u>**

**<u>IV. எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை.</u>**

//உண்மை நகல்//

R SARANYA Digitally signed by R SARANYA

நீதித்துறை நடுவர்,
குடியாத்தம்.